**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், விருதுநகர்**

**மாவட்டம் (இ) திருவில்லிபுத்தூர்/கூட்டுறவு சங்க**

**வழக்குகளுக்கான மேல்முறையீட்டு தீர்ப்பாயம்**

**முன்னிலை:-திரு.க.ஜெயக்குமார், பி.எல்.,எல்.எல்.எம்.,**

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**சி.எம்.ஏ.(சி.எஸ்.)No.38/2024**

**TNVR010044222024**

N.M.கிருஷ்ணராஜ்,
த/பெ முத்துப்பாண்டியன்,
வ.உ.சி.நகர்,
சமுசிகாபுரம்,
இராஜபாளையம் தாலுகா. ...மேல்முறையீட்டாளர்/
12 ம் பிரதிவாதி.

**/எதிர்/**

1) R.56, இராஜபாளையம் பால் உற்பத்தியாளர்கள்
கூட்டுறவு சங்கம் லிமிடெட்,
அதன் செயலாளர் மூலம்.

2.துணைப்பதிவாளர் (பால்வளம்),
கூரைக்குண்டு, விருதுநகர். ...எதிர்மேல்முறையீட்டாளர்கள்.

1983 ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 87(1)இன் கீழ் 2 ம் எதிர்மேல்முறையீட்டாளர்/துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர் அவர்களால் தண்ட தீர்வை நடவடிக்கை எண்.04/2023-ல் 23.04.2024 ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட

தீர்ப்புரையை ஆட்சேபித்து மேற்படி தாவா மனுவின் 12ம் பிரதிவாதி/மேல்முறையீட்டாளரால் இந்தப் பல்வகை மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**விசாரணை நீதிமன்றத்தில்:-**

R.56, இராஜபாளையம் பால் உற்பத்தியாளர்கள்
கூட்டுறவு சங்கம் லிமிடெட், ...வாதி.

**/எதிர்/**

N.M.கிருஷ்ணராஜ் ...12ம் பிரதிவாதி.

இப்பல்வகை மேல்முறையீடு என் முன்பு 18.02.2026ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, மேல்முறையீட்டாளர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.முத்துக்குமார் ஆஜராகியும், 1ம் எதிர்மேல்முறையீட்டாளரை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்ட நிலையிலும், 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் மாவட்ட அரசு வழக்கறிஞர் திரு.P.முனியசாமி ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையிலிருந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

1983ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 87(1)இன் கீழ் 2ம் எதிர்மேல்முறையீட்டாளர்/ துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர் அவர்களால் தண்ட தீர்வை நடவடிக்கை எண்.04/2023-ல் 23.04.2024ம் தேதியன்று

பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை ஆட்சேபித்து மேற்படி தாவா மனுவின் 12ம் பிரதிவாதி/மேல்முறையீட்டாளரால் இந்தப் பல்வகை மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>தாவா விபரம்:–</u>**

2) விருதுநகர் மாவட்டம், இராஜபாளையம் வட்டம், இராஜபாளையத்தில் செயல்பட்டு வரும் ஆர்.56 இராஜபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் துணைப்பதிவாளர் (பால்வளம்) விருதுநகர் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகிறது. இச்சங்கத்தில் 01.04.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.782/ஈ/2021–1 நாள்.25.01.2022–ன் படி 1983ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81–இன் கீழ் சட்டப்பூர்வ விசாரணைக்கு ஆணையிடப்பட்டதின் அடிப்படையில், முதுநிலை ஆய்வாளர்(பால்) துணைப்பதிவாளர் (பால்வளம்) அலுவலகம், விருதுநகர் அவர்கள் விசாரணை அலுவலராக நியமனம் செய்யப்பட்டு, விசாரணை அலுவலர் அவரது அறிக்கையை 27.05.2022–ல் சமர்ப்பித்துள்ளார்.

3)அந்த விசாரணை அறிக்கையில், சங்கத்திற்கு ரூ.2,48,46,314/– (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து எட்டு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து முந்நூற்று பதினான்கு மட்டும்) நிதியிழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி விசாரணை அறிக்கையில், சங்கத்தில் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் மற்றும் சங்கப் பணியாளர்கள், கூட்டுறவு சங்கங்களின் விதிகளுக்கு புறம்பாக செயல்பட்டு, தினசரி

பத்திரிக்கையில் விளம்பரம் செய்தது, பால்வள ஆணையர் அவர்களின் அனுமதியின்றி கொரோனா நோய் தொற்று காலத்தில் செலவுகள் மேற்கொண்டது, 01.04.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் சங்கக் கட்டிடம் மற்றும் சங்கக் கிளைகளுக்கு மின்சாதனங்கள் கொள்முதல் செய்தது, மின் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டது, சங்கக் கட்டிடம் மற்றும் பால் கொள்முதல் மையங்களில் முன் அனுமதியின்றி பராமரிப்பு செலவுகள் மேற்கொண்டது. 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகளில் விதி எண்.88(9)க்கு முரணாக சங்க வாகனங்களை பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் செலவுகள் மேற்கொண்டது, சங்கப் பணியாளர்களுக்கு தகுதிக்கு மீறிய பயணப்படி தொகையை அனமதித்தது, சங்கக் கிளைகளில் இருந்து பால் கொள்முதல் செய்து கொண்டுவர பால் வண்டிகளுக்கு வாடகையாக வழங்கியது, துணை விதிகளுக்கு முரணாக உபசரிப்பு செலவு, போட்டோ மற்றும் வீடியோ செலவு, பூஜை செலவு, தலைவர் அறைக்கு உண்டான பொருட்கள் வாங்கியது, சங்க சுற்றுப்புறத்தை சுத்தம் செய்தது, சங்கத் தலைவருக்கான மருத்துவச் செலவு, விழாச்செலவு, பாத்திரம் சுத்தம் செய்த செலவு, சீருடை செலவு, இதரச் செலவினங்கள், சங்கத் தலைவரின் வாகனத்திற்கான எரிபொருள் செலவினங்கள், 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகளில் விதி எண்.73(2)(a)–க்கு முரணாக புத்தக பாரங்கள் வாங்கியது, பால்பேடா உற்பத்தி பிரிவில் உற்பத்தி செலவை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்தது, பால்வள ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைக்கு முரணாக தினக்கூலி

பணியாளர்களை அமர்த்தியது, ஆணையர் அலுவலக வழிகாட்டுதல் நெறிமுறைகளை மீறி அமர்வு கட்டணம் அதிகம் வழங்கியது, சங்க பால் குளிரூட்டு சாதனத்தின் பராமரிப்பு செலவுகள் மேற்கொண்டது, ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை, சென்னை அவர்கள் அனுமதித்த தீபாவளி மற்றும் பொங்கல் பரிசுத் தொகைகளில் அதிகம் வழங்கியது, ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை, சென்னை அவர்களின் அனுமதி இல்லாமல் நவம்பர் 2021 மற்றும் டிசம்பர் 2021க்கு அகவிலைப்படியை உயர்த்தி வழங்கியதன் மூலம் சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் மேற்படி நிதியிழப்பிற்கு பொறுப்பானவர்களிடமிருந்து சட்டப்பிரிவு 87(1)–ன் கீழ் தண்ட நடவடிக்கை மேற்கொண்டு வசூல் செய்து நேர் செய்ய வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

**இனம்–13**

**வழக்கின் சுருக்கம்:**

4) வாதி சங்கத்தில் 01.04.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.6800/2013/என்–1, நாள்.20.04.2015க்கு முரணாக சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு கூடுதலாக அமர்வு கட்டணம் வழங்கி, அதன்மூலம் தொகை ரூ.74,800/–க்கு சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

| இனம் எண் | நிதியிழப்பு விபரம் | நிதியிழப்புத் தொகை | நிதியிழப்புக்கு பொறுப்பானவர்கள்/ பிரதிவாதிகள் (திருவாளர்கள்) |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 13 | 01.04.2020 முதல் 31.12.2021 வரை உள்ள காலத்தில் ஆணையர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.6800/2013/ என்–1, நாள்.20.04.2015 க்கு முரணாக சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு அமர்வு கட்டணம் வழங்கி,யதாக செலவு எழுதி சங்கத்திற்கு தொகை ரூ.74,800/–க்கு நிதியிழப்பு ஏற்படுத்தியது. | ரூ.74,800/– | 1)ட்டி.வனராஜ் சங்கத்தின் முன்னாள் தலைவர்<br>2)ப்பி.முருகேசன்,, மேலாளர் (பொ)<br>3)மா.ஜெயவீரன், முன்னாள் மேலாளர் (பொ)<br>4)கூ.இராஜலிங்கம், மேலாளர் (பொ)<br>5)ரா.தங்கமாரியப்பன், மேலாளர் (பொ)<br>12)என்.எம்.கிருஷ்ண ராஜ், நிர்வாகக்குழு உறுப்பினர்<br>14)மா.சமுத்திரம் நிர்வாகக்குழு உறுப்பினர்<br>15)பொ. பாலகிருஷ்ணன், நிர்வாகக்குழு உறுப்பினர் |

5) எனவே, இனம் எண்.13–ல் கண்ட வகைக்கு பிரிவு 81ன் கீழான விசாரணை அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில், சங்கத்திற்கு ஏற்பட்ட நிதியிழப்பு தொகை ரூ.74,800/–ஐ பின்வட்டியுடன் வசூலிக்க 1983ம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 87(1)–இன் கீழ் தண்டத் தீர்வை ஆணை ஏன் பிறப்பிக்கக்கூடாது? என்பதற்கான விளக்கத்தினை இந்த அறிவிப்பு கிடைக்கப்பெற்ற 15 தினங்களுக்குள் சமர்ப்பிக்கவேண்டுமென மேல்முறையீட்டாளர்/12ம் பிரதிவாதிக்கு காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டு, 2ம் எதிர்மேல்முறையீட்டாளரால் தண்ட நடவடிக்கை தொடரப்பட்டது.

6) மேற்படி அறிவிப்பினை பெற்றுக்கொண்டு சங்க முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினர்/மேல்முறையீட்டாளர்/12ம் பிரதிவாதி விளக்கம் அளித்துள்ளார். தண்ட நடவடிக்கை விசாரணைக்கு பின்னர், பிரிவு 81 விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் இதர தொடர்புடைய ஆவணங்கள் தண்ட நடவடிக்கை விசாரணையின்போது விசாரணைக்கு ஆஜரான நபர்கள் அளித்த வாக்குமூலங்கள் ஆகியவற்றை பரிசீலித்த தண்ட நடவடிக்கை அலுவலர், நிதியிழப்பு தொகுப்பு விபரம் இனம் எண்.13ல் கண்ட தொகை ரூ.74,800/–ல் பிரதிவாதி–13 திரு.எம்.வீரப்பன், பிரதிவாதி–16 திரு.து.தவசிமுத்து, பிரதிவாதி–17, திரு.க.வேல்முருகன், பிரதிவாதி–18 திரு.ச.செல்லத்துரை, பிரதிவாதி–19 திருமதி.ம.சுந்தரம்மாள், பிரதிவாதி–20 திருமதி.சி.தங்கத்தாய், பிரதிவாதி–21 திருமதி.ஜெ.சங்கரம்மாள் ஆகியோர் தாங்கள் அதிகம் பெற்ற அமர்வு கட்டணம் ரூ.47,600/–ஐ சங்கத்தில் செலுத்தி நிதியிழப்பை நேர் செய்துள்ளனர் என்பதினால், இவ்வினத்தின் கீழ் சங்கத்திற்கு ஏற்பட்ட மொத்த நிதியிழப்பு தொகை ரூ.74,800/–லிருந்து ரூ.47,600/–ஐ கழித்தது போக மீதி ரூ.27,200/– மட்டும் விசாரணையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, சங்கத்தில் சங்கத் தலைவர் பிரதிவாதி–1 திரு.ட்டி.வனராஜ் தன்னிச்சையாக செயல்பட்டு பற்றுச்சீட்டுகளில் பரிந்துரை கையொப்பம் இட்ட காரணத்திற்காகவும், பிரதிவாதி–12 திரு.என்.எம்.கிருஷ்ணராஜ், பிரதிவாதி–14 திரு.மா.சமுத்திரம், பிரதிவாதி–15 திரு.பொ.பாலகிருஷ்ணன் ஆகியோர் அமர்வு கட்டணத்தை பற்றுச்சீட்டுகளில் கையொப்பம் செய்து பெற்றுள்ள காரணத்தினால் நிதியிழப்புக்கு சங்கத்

தலைவருடன் சேர்ந்து தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பு எனவும், சங்கத்தின் மேலாளர் (பொறுப்பு)களான பிரதிவாதி–2 திரு.ப்பி.முருகேசன், பிரதிவாதி–3 திரு.ம.ஜெயவீரன், பிரதிவாதி–4 திரு.கூ.இராஜாலிங்கம், பிரதிவாதி–5 திரு.இரா.தங்கமாரியப்பன் ஆகியோர் ஆணையர் அவர்களின் சுற்றறிக்கைக்கு முரணாக பற்றுச்சீட்டுகளில் பரிந்துரை கையொப்பம் செய்துள்ள காரணத்திற்காகவும், இச்செலவினங்களை கண்காணிக்க தவறியும், சங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நிதியிழப்புத் தொகையை தடுக்க தவறி செயல்பட்ட காரணத்திற்காகவும், நிதியிழப்புத் தொகையில் தனித்தனியாக 10 சதவீத தொகையை வாதி சங்கத்திற்கு அபராதமாக செலுத்த வேண்டுமெனவும், எனவே, 01.04.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் வாதி சங்கத்தில் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டிய அமர்வு கட்டணத்தை விட அதிகம் வழங்கியதாக குறிப்பிட்டுள்ள செலவுத் தொகை ரூ.27,200/– (இருபத்து ஏழாயிரத்து இருநூறு மட்டும்)க்கான பற்றுச்சீட்டுகளில் வழங்காணை செய்த காரணத்திற்காகவும், சங்க முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினரான மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி–12 மற்றும் பிரதிவாதிகள்–14, 15 ஆகியோர் அதிகம் வழங்கப்பட்ட அமர்வு கட்டணத்தை பெற்றுக் கொண்ட வகையிலும், சங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நிதியிழப்புத் தொகை ரூ.27,200/–க்கு தனித்தனியாகவும், கூட்டாகவும் இத்தொகை செலுத்தப்படும் நாள்வரை அதாவது நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து 9 சதவீத வட்டியுடன் சங்கத்திற்கு திரும்ப செலுத்த பொறுப்பாக்கப்பட்டும், சங்கத்தின் மேலாளர் பொறுப்புகளான

ஆணையர் அவர்களின் சுற்றறிக்கைக்கு முரணாக பற்றுச்சீட்டுகளில் பரிந்துரை கையொப்பம் செய்துள்ள காரணத்திற்காகவும், இச்செலவினங்களை கண்காணிக்க தவறியும், சங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நிதியிழப்புத் தொகையை தடுக்க தவறி செயல்பட்ட காரணத்திற்காகவும் நிதியிழப்புத் தொகையில் தனித்தனியாக 10 சதவீத தொகையை வாதி சங்கத்திற்கு அபராதமாக செலுத்த வேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

7) மேற்படி தீர்ப்புரையை ஆட்சேபித்து 12ம் பிரதிவாதி/மேல்முறையீட்டாளரால் இந்தப் பல்வகை மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>மேல்முறையீட்டுக் குறிப்பாணையில் சொல்லியுள்ள மேல்முறையீட்டிற்கான காரணங்களின் சுருக்கம் பின்வருமாறு:–</u>**

8) 2ம் எதிர்மேல்முறையீட்டாளரால் தண்ட நடவடிக்கை எண்.04/2023ல் 23.04.2024 அன்று இந்த மேல்முறையீட்டாளர் 1, 14 மற்றும் 15 பிரதிவாதிகளுடன் சேர்ந்து ரூ.27,200/–ஐ 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் சங்கத்திற்கு செலுத்தக்கடமைப்பட்டவர் என்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவானது சட்டத்திற்கு எதிரானது. கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.6800/2013/எண்–1, நாள்.20.04.2015க்கு முரணாக சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு கூடுதலாக அமர்வு கட்டணம் வழங்கியதால், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்பட்டிருப்பதாக முடிவு செய்து, 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் தவறிழைத்துள்ளார். இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு விளக்கம் அளிப்பதற்கு போதுமான

வாய்ப்பு 2ம் எதிர்மேல்முறையீட்டாளரால் வழங்கப்படவில்லை. இந்த மேல்முறையீட்டாளர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு தகுந்த பதில் அளிப்பதற்கு மேற்படி 20.04.2015 ஆம் தேதியிட்ட சுற்றறிக்கையின் நகல் 2ம் எதிர்மேல்முறையீட்டாளரால் வழங்கப்படவில்லை. சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு அமர்வு கட்டணம் வழங்கியதில் கூட்டுறவு சங்கங்களின் சட்டம் மற்றும் துணை விதிகள் படி எந்தவிதமான விதி மீறலும் நடைபெறவில்லை என்பதை 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் கவனிக்கத் தவறிவிட்டார். இந்த மேல்முறையீட்டாளரால் அனுப்பப்பட்ட விளக்கத்தை 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் கருத்திற்கொள்ளவில்லை. சங்கத்தின் பொதுக்குழுவால் அனுமதிக்கப்பட்ட அமர்வு கட்டணமே நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்று இந்த மேல்முறையீட்டாளர் அனுப்பிய விளக்கத்தில் தெளிவாக குறிப்பிட்டுள்ளார்.

9) சங்கத் தலைவரால் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு அமர்வு கட்டணம் வழங்கப்பட்டிருப்பதையும், அதற்கு இந்த மேல்முறையீட்டாளர் எந்த வகையிலும் பொறுப்பாகமாட்டார் என்பதையும் 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் கவனிக்கத் தவறிவிட்டார். நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும் அமர்வு கட்டணத்தின் அளவை நிர்ணயிப்பதில், இந்த மேல்முறையீட்டாளருக்கு எந்தப் பங்கும் இல்லை என்று 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் கூறியிருக்கவேண்டும். பணவீக்கச் செலவுகளுக்கு ஏற்ப நிர்வாகக்குழுவின் அமர்வுக் கட்டணங்களை மீண்டும், மீண்டும் நிர்ணயிப்பதற்கான கூட்டுறவு சங்கச் சட்டத்தில்,

சங்கத்தின் துணைச் சட்டங்களின் கீழ் அல்லது அதன் கீழ் உருவாக்கப்பட்ட விதிகளில் எந்தத் தடையும் இல்லை என்பதை 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் கவனிக்கத் தவறிவிட்டார். பதிவாளரால் பரிந்துரைக்கப்பட்ட அமர்வுக் கட்டணத் தொகை 2015 ஆம் ஆண்டில் இருந்தது, மேலும் அது 2020−2021 ஆம் ஆண்டில் பணவீக்கச் செலவுகளுக்கு விகிதாசாரமாக இல்லை. அமர்வு கட்டணத்தின் அளவை மாற்றுவதற்கு பதிவாளரிடமிருந்து முன் அனுமதி பெற சங்கத்தை கட்டாயப்படுத்தும் எந்த விதியும் இல்லை. ஆகவே, இம்மேல்முறையீட்டினை அனுமதித்து, 2ம் எதிர்மேல்முறையீட்டாளரால் தண்ட நடவடிக்கை எண்.04/2023−ல் 24.03.2024 ம் தேதியன்று இனம் எண்.13 ல் ரூ.27,200/−ஐ பொறுத்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை நீக்கரவு செய்து உத்தரவிடவேண்டுமென பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

10) இப்பல்வகை மேல்முறையீட்டில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவென்றால்:−

(i) 2ம் எதிர்மேல்முறையீட்டாளர்/துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர் அவர்களால் தண்ட தீர்வை நடவடிக்கை எண்.04/2023−ல் 23.04.2024 ம் தேதியன்று இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக இனம் எண்.13 ல் ரூ.27,200/−ஐ பொறுத்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை சரியானதா?

(ii) இந்தப் பல்வகை மேல்முறையீடு அனுமதிக்கக் கூடியதா? என்பதேயாகும்.

**<u>பிரச்சினைகள் 1 மற்றும் 2 க்கான தீர்வு:–</u>**

11) 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 87(1)இன் கீழ் 2ம் எதிர்மேல்முறையீட்டாளர்/ துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர் அவர்களால் தண்ட தீர்வை நடவடிக்கை எண்.04/2023–ல் 23.04.2024ம் தேதியன்று இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக இனம் எண்.13 ல் ரூ.27,200/–ஐ பொறுத்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை நீக்கரவு செய்து, மேல்முறையீட்டை அனுமதிக்கக்கோரி மேல்முறையீட்டாளர், இம்மேல்முறையீட்டினை தாக்கல் செய்துள்ளார்.

12)இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் சங்கத்தில் நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்ததை ஒப்புக்கொள்வதாகவும், அதே வேளையில் சங்கத்தின் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு அமர்வு கட்டணம் வழங்கியதில் எந்தவிதமான விதி மீறலும் நடைபெறவில்லை என்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அமர்வு கட்டணத்தின் அளவை நிர்ணயிப்பதில், இந்த மேல்முறையீட்டாளருக்கு எந்த பங்கும் இல்லை என்றும் சங்கத் தலைவரால் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு அமர்வு கட்டணம் வழங்கப்பட்டது என்றும் அதனை தவறாக நினைத்து அதன் அடிப்படையில், இந்த மேல்முறையீட்டாளர் சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்படுத்தியுள்ளார் என்று முடிவு செய்து, அதன் அடிப்படையில் பிறப்பிக்கப்பட்ட விசாரணையின் முடிவு என்பது சட்டப்படியானது இல்லை என்றும் அது ரத்து செய்யப்படவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

13) 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில், 01.04.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் சங்கத்தில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.782/ஈ/2021–1 நாள்.25.01.2022–ன் படி 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப்பிரிவு 81–இன் கீழ் சட்டப்பூர்வ விசாரணைக்கு ஆணையிடப்பட்டதை தொடர்ந்து விசாரணை அதிகாரி நியமனம் செய்யப்பட்டு, விசாரணை அதிகாரி சமர்ப்பித்த அறிக்கையின் அடிப்படையில் விசாரணை நடைபெற்று தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அதனால் அந்த தீர்ப்புரையினை உறுதி செய்து, மேல்முறையீட்டை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

14) 1ம் எதிர்மேல்முறையீட்டாளரான ஆர்.56 இராஜபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் 01.04.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் நடைபெற்ற முறைகேடுகள் தொடர்பாக 2ம் எதிர்மேல்முறையீட்டாளரான துணைப்பதிவாளர் (பால்வளம்) விருதுநகர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.782/ஈ/2021–1, நாள்.25.01.2022ன் படி 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 81ன் கீழ் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு இருக்கிறது. அதன் அடிப்படையில், பிரிவு 81ன் கீழ் ஒரு விசாரணை அலுவலர் நியமனம் செய்யப்பட்டு, அவர் விசாரணை செய்து தாக்கல் செய்த அறிக்கையில், சங்கத்தில் நிர்வாகத்திற்கு பொறுப்பானவர்கள் மற்றும் சங்கப் பணியாளர்கள், கூட்டுறவு சங்கங்களின் விதிகளுக்கு புறம்பாக செயல்பட்டு, தினசரி

பத்திரிக்கையில் விளம்பரம் செய்தது, பால்வள ஆணையர் அவர்களின் அனுமதியின்றி கொரோனா நோய் தொற்று காலத்தில் செலவுகள் மேற்கொண்டது, 01.04.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் சங்கக் கட்டிடம் மற்றும் சங்கக் கிளைகளுக்கு மின்சாதனங்கள் கொள்முதல் செய்தது, மின் பராமரிப்பு பணிகள் மேற்கொண்டது, சங்கக் கட்டிடம் மற்றும் பால் கொள்முதல் மையங்களில் முன் அனுமதியின்றி பராமரிப்பு செலவுகள் மேற்கொண்டது. 1988 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகளில் விதி எண்.88(9)க்கு முரணாக சங்க வாகனங்களை பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தல் செலவுகள் மேற்கொண்டது, சங்கப் பணியாளர்களுக்கு தகுதிக்கு மீறிய பயணப்படி தொகையை அனுமதித்தது, சங்கக் கிளைகளில் இருந்து பால் கொள்முதல் செய்து கொண்டுவர பால் வண்டிகளுக்கு வாடகையாக வழங்கியது, துணை விதிகளுக்கு முரணாக உபசரிப்பு செலவு, போட்டோ மற்றும் வீடியோ செலவு, பூஜை செலவு, தலைவர் அறைக்கு உண்டான பொருட்கள் வாங்கியது, சங்க சுற்றுப்புறத்தை சுத்தம் செய்தது, சங்கத் தலைவருக்கான மருத்துவச் செலவு, விழாச்செலவு, பாத்திரம் சுத்தம் செய்த செலவு, சீருடை செலவு, இதரச் செலவினங்கள், சங்கத் தலைவரின் வாகனத்திற்கான எரிபொருள் செலவினங்கள், 1988 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் விதிகளில் விதி எண்.73(2)(a)–க்கு முரணாக புத்தக பாரங்கள் வாங்கியது, பால்பேடா உற்பத்தி பிரிவில் உற்பத்தி செலவை விட குறைந்த விலைக்கு விற்பனை செய்தது, பால்வள ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கைக்கு

முரணாக தினக்கூலி பணியாளர்களை அமர்த்தியது, ஆணையர் அலுவலக வழிகாட்டுதல் நெறிமுறைகளை மீறி அமர்வு கட்டணம் அதிகம் வழங்கியது, சங்க பால் குளிரூட்டு சாதனத்தின் பராமரிப்பு செலவுகள் மேற்கொண்டது, ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை, சென்னை அவர்கள் அனுமதித்த தீபாவளி மற்றும் பொங்கல் பரிசுத் தொகைகளில் அதிகம் வழங்கியது, ஆணையர், பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத்துறை, சென்னை அவர்களின் அனுமதி இல்லாமல் நவம்பர் 2021 மற்றும் டிசம்பர் 2021 க்கு அகவிலைப்படியை உயர்த்தி வழங்கியதன் மூலம் சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி நிதியிழப்பிற்கு பொறுப்பானவர்களிடமிருந்து சட்டப்பிரிவு 87(1)–ன் கீழ் தண்ட நடவடிக்கை மேற்கொண்டு வசூல் செய்து நேர் செய்ய வேண்டுமென பரிந்துரைத்துள்ளார்.

15)மேல்முறையீட்டாளர் தரப்பில், 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 87 ல் கீழ்க்கண்டவாறு சொல்லப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

> **"87.Surcharge.-** (1) Where in the course of an audit under section 80 or an inquiry under section 81 or an inspection or investigation under section 82 or inspection of books under section 83 or the winding-up of a society, it appears that, any person who is or was entrusted with the organisation or management of the society or any past or present officer or servant of the society, (either on his own or in connivance with any other person), has misappropriated or fraudulently retained (or transferred any money) or other property or been guilty of breach of trust in relation to the society

or has caused any deficiency in the assets of the society by breach of trust or wilful negligence or has made any payment which is not in accordance with this Act, the Rules or the bye-laws, the Registrar himself or any person specially authorised by him in this behalf, of his own motion or on the application of the board, liquidator or any creditor or contributory may frame charges against such person"

பிரிவு 80 இன் கீழ் ஒரு தணிக்கை அல்லது பிரிவு 81 இன் கீழ் ஒரு விசாரணை அல்லது பிரிவு 82 இன் கீழ் ஒரு ஆய்வு அல்லது விசாரணை அல்லது பிரிவு 83 இன் கீழ் புத்தகங்களை ஆய்வு செய்தல் அல்லது ஒரு சங்கத்தை கலைத்தல் ஆகியவற்றின்போது, சங்கத்தின் அமைப்பு அல்லது நிர்வாகத்தில் ஒப்படைக்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட எந்தவொரு நபரும் அல்லது சங்கத்தின் கடந்த கால அல்லது தற்போதைய அதிகாரி அல்லது ஊழியரும் எந்தவொரு பணத்தையோ அல்லது பிற சொத்தையோ தவறாகப் பயன்படுத்தியதாகவோ அல்லது மோசடியாகவோ வைத்திருந்ததாகவோ அல்லது சங்கம் தொடர்பாக நம்பிக்கை மீறல் குற்றவாளியாக இருந்ததாகவோ அல்லது நம்பிக்கை மீறல் அல்லது வேண்டுமென்றே அலட்சியம் மூலம் சங்கத்தின் சொத்துக்களில் ஏதேனும் குறைபாட்டை ஏற்படுத்தியதாகவோ அல்லது இந்தச் சட்டம், விதிகள் அல்லது துணை விதிகளுக்கு இணங்காத எந்தவொரு கட்டணத்தையும் செலுத்தியதாகவோ தெரிந்தால், பதிவாளர் அல்லது அவரால் சிறப்பாக அங்கீகரிக்கப்பட்ட எந்தவொரு நபரும், அவரது சொந்த இயக்கத்தின் பேரிலோ அல்லது குழுவின் விண்ணப்பத்தின் பேரிலோ, கலைப்பவர் அல்லது எந்தவொரு கடன் வழங்குபவர்

அல்லது பங்களிப்பாளரும் அத்தகைய நபருக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைக்கலாம் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

16) இந்த வழக்கின் மேல்முறையீட்டாளர், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் கூட்டுறவு சங்கத்தில் கடந்த 24.07.2019 முதல் பிரிவு 81ன் கீழான விசாரணை முடியும் வரை துணைத்தலைவராக பதவி வகித்து வந்ததாக அவரே ஒப்புக்கொண்டுள்ளார். இவ்வாறான நிலையில், மேற்படி சங்கத்தில் 01.04.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு, ஆணையர் அலுவலக வழிகாட்டுதல் நெறிமுறைகளை மீறி வழங்கவேண்டிய அமர்வுக்கட்டணத்தை விட கூடுதலாக தொகை ரூ.74,800/- அமர்வுக்கட்டணமாக வழங்கியதின் காரணமாக சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்பட்டிருப்பதாகவும், அந்த நிதியிழப்பில் இந்த மேல்முறையீட்டாளரின் பங்கும் இருக்கிறது என்றும் அவரிடமிருந்து மேற்படி தொகைகளை வரப்பெறுவதற்காக தொகையைச் செலுத்த அந்த விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

17) அந்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில், 2ம் எதிர்மேல்முறையீட்டாளரால் 23.04.2024ல் 1983ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 87(1)இன் கீழ் விசாரணை அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள அந்த தொகையை வரப்பெறுவதற்காக இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த இறுதி உத்தரவு என்பது இந்த மேல்முறையீட்டாளரை பொறுத்து இனம் எண்.13ல் கண்ட தொகை ரூ.74,800/-ல் பிரதிவாதி-13

திரு.எம்.வீரப்பன், பிரதிவாதி–16 திரு.து.தவசிமுத்து, பிரதிவாதி–17, திரு.க.வேல்முருகன், பிரதிவாதி–18 திரு.ச.செல்லத்துரை, பிரதிவாதி–19 திருமதி.ம.சுந்தரம்மாள், பிரதிவாதி–20 திருமதி.சி.தங்கத்தாய், பிரதிவாதி–21 திருமதி.ஜெ.சங்கரம்மாள் ஆகியோர் தாங்கள் அதிகம் பெற்ற அமர்வு கட்டணம் ரூ.47,600/–ஐ சங்கத்தில் செலுத்தி நிதியிழப்பை நேர் செய்துள்ளனர் என்பதினால், இவ்வினத்தின் கீழ் சங்கத்திற்கு ஏற்பட்ட மொத்த நிதியிழப்பு தொகை ரூ.74,800/–லிருந்து ரூ.47,600/–ஐ கழித்தது போக மீதி ரூ.27,200/– மட்டும் விசாரணையில் எடுத்துக்கொள்ளப்பட்டு, சங்கத்தில் சங்கத் தலைவர் பிரதிவாதி–1 திரு.ட்டி.வனராஜ் தன்னிச்சையாக செயல்பட்டு பற்றுச்சீட்டுகளில் பரிந்துரை கையொப்பம் இட்ட காரணத்திற்காகவும், பிரதிவாதி–12 திரு.என்.எம்.கிருஷ்ணராஜ், பிரதிவாதி–14 திரு.மா.சமுத்திரம், பிரதிவாதி–15 திரு.பொ.பாலகிருஷ்ணன் ஆகியோர் அமர்வு கட்டணத்தை பற்றுச்சீட்டுகளில் கையொப்பம் செய்து பெற்றுள்ள காரணத்தினால் நிதியிழப்புக்கு சங்கத் தலைவருடன் சேர்ந்து தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பு எனவும், சங்கத்தின் மேலாளர் (பொறுப்பு)களான பிரதிவாதி–2 திரு.ப்பி.முருகேசன், பிரதிவாதி–3 திரு.ம.ஜெயவீரன், பிரதிவாதி–4 திரு.கூ.இராஜாலிங்கம், பிரதிவாதி–5 திரு.இரா.தங்கமாரியப்பன் ஆகியோர் ஆணையர் அவர்களின் சுற்றறிக்கைக்கு முரணாக பற்றுச்சீட்டுகளில் பரிந்துரை கையொப்பம் செய்துள்ள காரணத்திற்காகவும், இச்செலவினங்களை கண்காணிக்க தவறியும், சங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நிதியிழப்புத் தொகையை தடுக்க தவறி செயல்பட்ட காரணத்திற்காகவும், நிதியிழப்புத் தொகையில்

தனித்தனியாக 10 சதவீத தொகையை வாதி சங்கத்திற்கு அபராதமாக செலுத்த வேண்டுமெனவும், எனவே, 01.04.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் வாதி சங்கத்தில் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர்களுக்கு வழங்கவேண்டிய அமர்வு கட்டணத்தை விட அதிகம் வழங்கியதாக குறிப்பிட்டுள்ள செலவுத் தொகை ரூ.27,200/– (இருபத்து ஏழாயிரத்து இருநூறு மட்டும்)க்கான பற்றுச்சீட்டுகளில் வழங்காணை செய்த காரணத்திற்காகவும், சங்க முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினரான மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி–12 மற்றும் பிரதிவாதிகள்–14, 15 ஆகியோர் அதிகம் வழங்கப்பட்ட அமர்வு கட்டணத்தை பெற்றுக் கொண்ட வகையிலும், சங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நிதியிழப்புத் தொகை ரூ.27,200/–க்கு தனித்தனியாகவும், கூட்டாகவும் இத்தொகை செலுத்தப்படும் நாள்வரை அதாவது நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து 9 சதவீத வட்டியுடன் சங்கத்திற்கு திரும்ப செலுத்த பொறுப்பாக்கப்பட்டும், சங்கத்தின் மேலாளர் பொறுப்புகளான ஆணையர் அவர்களின் சுற்றறிக்கைக்கு முரணாக பற்றுச்சீட்டுகளில் பரிந்துரை கையொப்பம் செய்துள்ள காரணத்திற்காகவும், இச்செலவினங்களை கண்காணிக்க தவறியும், சங்கத்திற்கு ஏற்படுத்தப்பட்ட நிதியிழப்புத் தொகையை தடுக்க தவறி செயல்பட்ட காரணத்திற்காகவும் நிதியிழப்புத் தொகையில் தனித்தனியாக 10 சதவீத தொகையை வாதி சங்கத்திற்கு அபராதமாக செலுத்த வேண்டுமெனவும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

18) மேற்படி தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையால் பாதிக்கப்பட்ட 12ம் பிரதிவாதி/மேல்முறையீட்டாளர் இந்த மேல்முறையீட்டை தாக்கல்

செய்துள்ளார். இந்த மேல்முறையீட்டுக் குறிப்பாணையில் பல்வேறு சங்கதிகளை எடுத்துரைத்திருந்தாலும் கூட, மேல்முறையீட்டாளரான 12ம் பிரதிவாதி சங்கத்திலிருந்து அமர்வு கட்டணம் வாங்கியதை மறுக்கவில்லை. அதனை தொடர்ந்து தாவா நடுவர் முன்பு நடைபெற்ற விசாரணையின்போது, 12ம் பிரதிவாதி/மேல்முறையீட்டாளர் தரப்பில் விளக்கம் மட்டுமே அனுப்பப்பட்டுள்ளது என்றும், அவர் விசாரணையில் கலந்து கொள்ளவில்லை என்றும் சொல்லப்பட்டிருப்பதையும் இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் மறுக்கப்படவில்லை.

19) இவ்வாறான நிலையில், இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் அவர்களின் 20.04.2015 ஆம் தேதியிட்ட சுற்றறிக்கை Na.Ka.No.6800/2013/No.1–ஐ நீதிமன்றத்தில் ஒப்படைக்கக்கோரி இ.ம.எண்.3/2025 தாக்கல் செய்யப்பட்டதின் அடிப்படையில், 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் மேற்படி ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. அதில் Sitting Fees–ஐ பொறுத்து கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

| S. No. (1) | Details (2) | Existing rate of sitting fees (3) | Revised rate of Sitting fees (4) |
|---|---|---|---|
| 1. | Primary Milk Co-operative Societies | Rs.100/- | Rs.200/- |
| 2. | District Co-operative Milk Producers Unions | Rs.400/- | Rs.750/ |
| 3. | Tamil Nadu Co-operative Milk Producers' Federation | Rs.800/- | Rs.1000/- |

மேலே குறிப்பிட்டுள்ள பட்டியலில் கண்டபடி, இந்த வழக்கின் 1ம் எதிர்மேல்முறையீட்டாளரான R.56, இராஜபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் என்பது வரிசை எண்.1 Primary Milk Co-operative Societies-ன் கீழ் வருகிறது என்றும் அதற்கு Existing rate of sitting fees Rs.100/-என்பது Revised rate of Sitting fees Rs.200/- ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்றும் ஆனால் இந்த வழக்கின் 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் சங்கத்தில் 01.04.2020 முதல் 31.12.2021 வரையிலான காலத்தில் சங்க நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு ஆணையர் அலுவலக வழிகாட்டுதல் நெறிமுறைகளை பின்பற்றி வழங்கப்படவேண்டிய அமர்வுக்கட்டணம் ரூ.35200/-க்கு பதிலாக ரூ.1,10,000/- வழங்கப்பட்டதினால், 1ம் எதிர்மேல்முறையீட்டாளர் சங்கத்திற்கு ரூ.74800/- நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அதனை மறுதளிக்கும் விதமாக இந்த வழக்கின் மேல்முறையீட்டாளர் தரப்பில் வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

20) ஆகவே, மேல்முறையீட்டாளர்/12ம் பிரதிவாதி தரப்பில் சங்கத்திலிருந்து தாவா அமர்வு கட்டணம் பெறப்படவில்லை என்றோ, கூடுதலாக பெற்ற அமர்வு கட்டணம் செலுத்தப்பட்டுவிட்டதாகவோ கட்சி கிடையாது. இவ்வாறான நிலையில், இனம் எண்.13ல் கண்ட நிதியிழப்பு தொகை ரூ.74,800/-ல் பிரதிவாதி-13 திரு.எம்.வீரப்பன், பிரதிவாதி-16 திரு.து.தவசிமுத்து, பிரதிவாதி-17, திரு.க.வேல்முருகன், பிரதிவாதி-18 திரு.ச.செல்லத்துரை, பிரதிவாதி-19 திருமதி.ம.சுந்தரம்மாள், பிரதிவாதி-20

திருமதி.சி.தங்கத்தாய், பிரதிவாதி-21 திருமதி.ஜெ.சங்கரம்மாள் ஆகியோர் தாங்கள் அதிகம் பெற்ற அமர்வு கட்டணம் ரூ.47,600/-ஐ சங்கத்தில் செலுத்தி நிதியிழப்பை நேர் செய்துள்ளனர் என்று 2ம் எதிர்மேல்முறையீட்டாளர் பிறப்பித்த மேற்படி தீர்ப்புரையில் தெளிவாக கூறப்பட்டுள்ளதை காணும்போது, இந்த மேல்முறையீட்டாளரும் சங்கத்திலிருந்து கூடுதல் அமர்வு கட்டணம் பெற்றுள்ளார் என்பதையும், அதன் விளைவாக சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

21) அடுத்ததாக, இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் வாதுரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் காணும்போது, சங்கத் தலைவரால் தான் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு அமர்வு கட்டணம் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதே தவிர, கூடுதலாக அமர்வு கட்டணம் எதுவும் பெறப்படவில்லை என்று சொல்லப்படாத ஒரு நிலையிலும், மேலும் சங்கத்திற்கு ஏற்பட்டதாகக் கூறும் இந்த நிதியிழப்பை 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டம் பிரிவு 81ன் கீழ் நியமனம் செய்யப்பட்ட விசாரணை அதிகாரி தாக்கல் செய்த அறிக்கையிலும், அதனை தொடர்ந்து பிரிவு 87(1)ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பிலும், இந்த மேல்முறையீட்டாளர் சங்கத்திலிருந்து அமர்வு கட்டணம் பெற்றுள்ளார் என்று காணப்படும் நிலையிலும், இந்த மேல்முறையீட்டாளர் தரப்பில் நிர்வாகக்குழு உறுப்பினர்களுக்கு செலுத்தப்படும் அமர்வு கட்டணத்தின் அளவை நிர்ணயிப்பதில், இந்த மேல்முறையீட்டாளருக்கு எந்த பங்கும் இல்லை என்று கூறியிருந்தாலும், அவர் சங்கத்தின் நிர்வாகக்குழு

உறுப்பினராக இருந்து துணைத்தலைவராக செயல்பட்டு வந்துள்ளார் என்பதை காணும் நிலையிலும், பிரிவு 81 விசாரணை அதிகாரி இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக இனம் எண்.13 ல் ரூ.74,800/ சங்கத்திற்கு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டதாக கூறும் நிலையிலும், பிரதிவாதி–13 திரு.எம்.வீரப்பன், பிரதிவாதி–16 திரு.து.தவசிமுத்து, பிரதிவாதி–17, திரு.க.வேல்முருகன், பிரதிவாதி–18 திரு.ச.செல்லத்துரை, பிரதிவாதி–19 திருமதி.ம.சுந்தரம்மாள், பிரதிவாதி–20 திருமதி.சி.தங்கத்தாய், பிரதிவாதி–21 திருமதி.ஜெ.சங்கரம்மாள் ஆகியோர் தாங்கள் அதிகம் பெற்ற அமர்வு கட்டணம் ரூ.47,600/–ஐ சங்கத்தில் செலுத்தி நிதியிழப்பை நேர் செய்துள்ளனர் என்பதினால், இவ்வினத்தின் கீழ் சங்கத்திற்கு ஏற்பட்ட மொத்த நிதியிழப்பு தொகை ரூ.74,800/–லிருந்து ரூ.47,600/–ஐ கழித்தது போக மீதி ரூ.27,200/–ஐ சங்கத்தின் முன்னாள் தலைவர் பிரதிவாதி–1 மற்றும் சங்க முன்னாள் நிர்வாகக்குழு உறுப்பினரான மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி–12 மற்றும் பிரதிவாதிகள்–14, 15 ஆகியோர்கள் தனித்தனியாகவும், கூட்டாகவும் இத்தொகை செலுத்தப்படும் நாள்வரை அதாவது நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்ட நாளிலிருந்து 9 சதவீத வட்டியுடன் சங்கத்திற்கு திரும்ப செலுத்த வேண்டுமென 2ம் எதிர்மேல்முறையீட்டாளர்/துணைப்பதிவாளர் தீர்ப்புரை பிறப்பித்திருப்பது சரியானதாகவே தோற்றமளிப்பதால். அந்த தீர்ப்புரையில் தலையிடுவதற்கு மேல்முறையீட்டாளர் தரப்பில் சரியான முகாந்திரம் இல்லாத நிலையில், இந்தப் பல்வகை மேல்முறையீடு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், 2ம் எதிர்மேல்முறையீட்டாளர்/

துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர் அவர்களால் தண்ட தீர்வை நடவடிக்கை எண்.04/2023–ல் 23.04.2024ம் தேதியன்று இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக இனம் எண்.13ல் ரூ.27,200/–ஐ பொறுத்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரையை உறுதி செய்தும், இந்தப் பல்வகை மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தும், இந்தப் பிரச்சினைகளுக்கு இந்நீதிமன்றத்தால் தீர்வு காணப்படுகிறது.

22) முடிவாக, இந்தப் பல்வகை மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டு, 2ம் எதிர்மேல்முறையீட்டாளரான துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர் அவர்களால் தண்ட தீர்வை நடவடிக்கை எண்.04/2023–ல் 23.04.2024ம் தேதியன்று இந்த மேல்முறையீட்டாளருக்கு எதிராக இனம் எண்.13ல் ரூ.27,200/–ஐ பொறுத்து பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை உறுதி செய்யப்பட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. வழக்கின் தன்மையையும், சூழ்நிலைகளையும் கருதி தரப்பினர்கள் அவரவர் செலவுத் தொகைகளை அவரவர்களே ஏற்றுக்கொள்ள உத்தரவிடப்படுகிறது.

என்னால் சுருக்கெழுத்து – தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06 ஆம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய தீர்ப்புரை பகரப்பட்டது.

K JEYAKUMAR

Digitally signed by K JEYAKUMAR
Date: 2026.03.06 17:57:23 +0530

**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி/**
**கூட்டுறவு சங்க வழக்குகளுக்கான**
**மேல்முறையீட்டு தீர்ப்பாயர்**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**நகல்:–** துணைப்பதிவாளர் (பால்வளம்), விருதுநகர்.

முதன்மை மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.
சி.எம்.ஏ.(சி.எஸ்) 38/2024
வரைவு/சீரான உத்தரவு
06.03.2026.